**தேயிலை மற்றும் இறப்பர் சிறு நிலவுடமையாளர் பாதுகாப்பு செயற்திட்டம் - 2023/2024**

**---------------------------------------------------------------------------------------------------------------------------**

தேயிலை மற்றுதட சிறுநிலவுடமையாளர பாதுகாப்புச் செயற்திட்டத்தின் 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான கணக்கெழிப்பு நடவடிக்கைகளின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கும் (IFAD) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 ஏப்ரல் 26 ஆந் திகதிய 2000001447 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IX ஆம் உறுப்புரையின் 9.03 (அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், பொருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. செயற்திட்டப் பகுதிகளிலுள்ள தேயிலை மற்றும் இறப்பர் சிறு கைத்தாழிலாளர்களின் அதிகமான உற்பத்தி, இலாபத்தன்மை மற்றும் பின்நிகழும் பெருளாதார நடவக்கைளை விருத்தி செய்வதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும்.. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா. 8,502 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 65.4 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 3,349.30 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 25.77 மில்லியன் தொகை விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தால் (IFAD). நிதியளிப்புச் செய்யப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 5,153 மில்லியன் தொகை மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்தின் வங்கிகள், நலனாளிகள் மற்றும் தனியார் துறையினரால் நிதியளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன ் நடவடிக்கைகளை 2016 ஆகஸ்ட் 15 இல் தொடங்கியிருந்ததுடன் 2021 ஏப்ரல் 23 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2023 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

என்னுடைய அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் தவிர செயற்திட்டத்தின் 2024 மாரச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களை

தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர ் களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தைஉள்ளடக்குகின்ற கணக்காய ் வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக திர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன் அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள ்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 05 இன் 43(அ) ஆம் பந்தியின் பிரகாரம் நிதி நிலமைக்கூற்றின் ஒவ்வொரு கூற்றிற்கான சொத்தககள் மற்றும் பொறுப்புகள் நிதி நிலமைக் கூற்றின் இறுதி வெளிநாட்டு நாணய மாற்று வீதத்தில் மாற்றப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2024 மார்ச் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் வெளிநாட்டு கடன் தொடர்பில் ரூபா 3,257.08 மில்லியன் தொகையான முன்னைய ஆண்டில் செய்யப்பட்ட நாணயமாற்று சீராக்கல்கள் வெளிநாட்டு கடன் மீதிக்கு திரும்பவும் மாற்றப்பட்டிருந்தது. இதன் விளைவால் 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான வெளிநாட்டுக் கடன் மீதி அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் வழிகாட்டல் 3/2024 இன் பிரகாரம் செயற்திட்ட நிதிக் கூற்றில் நாணயமாற்று முரணிற்கான சீராக்கல் வேண்டப்பட்டிருக்கவில்லை. | SLPSAS 05 உடன் இணங்க வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் 753(2) | நி.பி 753(2) இற்கமைய செயற்திட்டத்தால் 09 நிறுவனங்களிற்கு கையளிக்கப்பட்டிருந்த பொருட்கள் ரூபா 117,246,984 இற்காக செயற்திட்டத்தில் பொருள் பெறப்பட்ட குறிப்பின் மூலப் பிரதி இருக்கவில்லை. | பட்டியலிடப்பட்ட திகதியில் உரிய DPMUs ஆல் பயன்படுத்தப்பட்டிருந்த விடயங்களின் கருத்திற்கொள்ளக்கூடிய எண்ணிக்கை கையளிக்கப்பட்டிருந்தது. | நி.பி 753(2) உடன் இணங்க வேண்டும். |

3. பௌதீக செயலாற்றல்

3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| இல | கூறு | நடவடிக்கை | 2024 மார்ச் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயாற்றல் அலகுகள் | அடையப்பட்ட பௌதீக செயலாற்றல் அலகுகள் | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| (அ) | தேயிலை சிறு நில உடமையாளர் அபிவிருத்தி | தேயிலை சிறு நில உடமையாளரிற்கான சந்தை வாய்பு உற்பத்தி ஆதரவு | 4500 கெட்டயர் காணி | 4131 கெட்டயர் காணி | செயற்திட்டமானது 2016 இலிருந்து 2022 வரையான தெரிவு செய்யப்பட்ட ஆறு மாவட்டங்களில் 5,500 கெட்டயர் தேயிலைக் காணி புனரமைப்பு மற்றும் மீள் மர நடுகைகள் திட்டமிடப்பட்டிருந்ததுடன் 2023 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்ததுஎவ்வாறாயினும், திட்டமிடப்பட்டவாறு 2016 இல் செயற்பாடுகள் தொடங்குவதற்கு செயற்திட்டம் தவறியிருந்தமையால் புனரமைத்தல் மற்றும் மீள்நடுகை தேயிலை காணிகள் 4,500 கெட்டெயர்களிற்கு திருத்தப்பட்டது. எவ்வாறாயினும், 369 கெட்டயர் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேயிலையுடன் | நெறிப்படுத்தல் குழு செயற்திட்ட இலக்கினை குறைப்பதற்கு தீர்மானம் எடுத்தருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டமானது திருத்தப்பட்ட இலக்கினை அடைவதற்கு இயலாதிருந்தது. | குறித்த செயற்திட்ட காலப் பகுதிக்குள் திட்டத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | திட்டமிடப் பட்டிருக்கவில்லை. | | |
| ஆ) | இறப்பர் சிறு நில உடமையாளர் அபிவிருத்தி | இறப்பர் சிறு நில உடமையாளரிற்கான சந்தை வாய்பு உற்பத்தி ஆதரவு | 3000 கெட்டயர் காணி | 2770 கெட்டயர் காணி | செயற்திட்டமானது 2016 முதல் 2022 வரை தெரிவு செய்யப்பட்ட இரண்டு மாவட்டங்களில் 3,000 கெட்டயர் இறப்பர் காணி மர நடுகைகள் திட்ட மிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 230 கெட்டயர்கள் இறப்பர் நடப்பட்டிருக்க வில்லை. | உடன்படுகிறோம், செயற்திட்டமானது இலக்கினை அடைவதற்கு இயலாதிருந்தது. | குறித்த செயற்திட்ட காலப் பகுதிக்குள் திட்டத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.2. குறைவாகப் பயனன்டுத்திய வளங்கள்

| இல | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சிறிய இறப்பர் தோட்டங்களின் 122 கெட்டயர் மற்றும் 227 கெட்டயர்கள் அம்பாறை மற்றும் மொனறாகலை மாவட்டங்களின் இறப்பர் பயிர் செய்கைக்காக உதவிகளில் முறையே ரூபா 3,972,290 மற்றும் ரூபா 6,801,923 செலுத்தப்பட்ட பொதிலும் இது மேற்கொள்வதற்கு தவறியிருந்தது. | இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் மரங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவி வழங்குதல் மூலம் இறப்பர் காணிகளை புனரமைத்தல் / பயிர்ச் செய்கை செயற்பாட்டில் உள்ளது. | குறித்த செயற்திட்ட காலப் பகுதிக்குள் திட்டத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | உதவு தொகை திட்டத்தின் கீழ் 2017 முதல் 2023 வரையான காலப் பகுதியின் போது ஆறு மாவட்டங்களில் 242 கெட்டயர்கள் மொத்தப பகுதிகளில் தேயிலை மீள் நடுகைக்கு அனுமதிகள் பெறப்பட்டிரந்த 805 நலனாளிகள் காணி அளவீடுகளில் தாமதம் மற்றும் புற்றரை வளர்த்தலில் தாமதம் போன்ற பல்வேறு காரணங்களால் ரூபா 35,931,707 ஆன தொகை பெற்ற பின்னர் எவ்வித வேலைகளும் தொடங்கியிருக்கவில்லை. | TRI பரிந்துரைகளின் பிரகாரம் அவர்களுடைய வேலைத்தள வேலைகளை பூர்த்தி செய்திருக்கவில்லை. THSDA கள உத்தியோகத்தர் அத்தகைய தேயிலை காணிகளில் பரிந்துரைகளை செய்வதற்கான நிலையில் இருக்கவில்லை. இந்த விடயம் ஏற்கனவெ இனங்காணப்பட்டிருந்ததுடன் கொடுப்பனவுகளை அறவிடவதற்கு தேவையான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகள் நெருக்கமாக கண்காணிக்கப்பட வேண்டியதுடன் உரிய காலத்தில் பூர்த்தியாக்கப்பட வேண்டும். |